62427



සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

සාමාන්‍ය පොදු පරීක්ෂණය
பொதுச் சாதாரணப் பரீட்சை
Common General Test

12 T

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
※ கணிப்பான்களைப் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது.
※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
※ 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** குடிசனமதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட அண்மைய குடிசனமதிப்புக்கேற்ப இலங்கையில் மிகவும் குறைந்த சனத்தொகை உள்ள மாவட்டங்கள்

(1) மாத்தளையும் கேகாலையும் ஆகும்.
(2) கிளிநொச்சியும் மன்னாரும் ஆகும்.
(3) வவுனியாவும் முல்லைத்தீவும் ஆகும்.
(4) மொனராகலையும் பொலன்னறுவையும் ஆகும்.
(5) மன்னாரும் முல்லைத்தீவும் ஆகும்.

**2.** ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள கோள்களில் ஒன்றின் மேற்பரப்பு இரும்பொட்சைட்டினால் மூடப்பட்டு, புவியிலிருந்தும் விண்வெளியிலிருந்தும் பார்க்கப்படும்போது செந்நிறத் தோற்றத்தைக் கொண்டிருப்பதனால் அது 'செந்நிறக் கோள்' எனப்படும். இக்கோளின் பெயர் யாது?

(1) புதன்
(2) செவ்வாய்
(3) சுக்கிரன்
(4) சனி
(5) வியாழன்

**3.** தெற்கு ஆசிய நாடுகளில் ஒன்றில் 2025 செப்ரெம்பர் மாதத்தில் அரசியற் பிணக்குக் காரணமாகக் கடுமையான சமூக-பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. பின்வருவனவற்றில் எது அந்நாடாகும்?

(1) இந்தியா
(2) பாகிஸ்தான்
(3) பங்களாதேஷ்
(4) மாலைதீவுகள்
(5) நேபாளம்

**4.** ICC உலக டெஸ்ட் சாம்பியன் இறுதிப்போட்டி (2025) என்பது 2023 - 2025 ICC உலக டெஸ்ட் சாம்பியன் பட்டத்தை வெல்லும் நாட்டைத் தீர்மானிப்பதற்காக 2025 யூன் 11 - 14 இல் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற ஒரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியாகும். அப்போட்டியில் பங்குபற்றிய நாடுகள்

(1) அவுஸ்திரேலியாவும் தென்னாபிரிக்காவும் ஆகும்.
(2) இங்கிலாந்தும் அவுஸ்திரேலியாவும் ஆகும்.
(3) இங்கிலாந்தும் தென்னாபிரிக்காவும் ஆகும்.
(4) நியூசீலாந்தும் பாகிஸ்தானும் ஆகும்.
(5) தென்னாபிரிக்காவும் இந்தியாவும் ஆகும்.

**5.** ஒரு மாகாண சபையின் முதலமைச்சரினதும் அமைச்சரவையினதும் மிகப் பிரதானமான பணி

(1) மத்திய அரசாங்கத்தின் முகவராகத் தொழிற்படுதல்
(2) அனர்த்த நிலைமைகளில் சனாதிபதியின் அறிவுறுத்தல்களுக்கேற்பச் செயற்படுதல்
(3) மாகாணத்தின் பிரதேச சூழலைப் பாதுகாத்தல்
(4) மக்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளைப் பாதுகாத்தல்
(5) கொள்கைகளை நடைமுறைப்படுத்தலும் தினசரி நிருவாகத்தை நிர்வகித்தலும்

[பக். 2 ஐப் பார்க்க

CS CamScanner

Past Papers Wiki



6. நாட்டின் சனத்தொகையின் அடிப்படைத் தேவைகளை எவ்வாறு நன்றாகப் பூர்த்தி செய்கின்றது என்பதைக் கணிப்பிடுவதற்கு மூன்று முக்கிய குறிகாட்டிகளை (indicators) அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படும் சுட்டெண் (index) யாது?
(1) தலா வருமானச் சுட்டெண்
(2) மனித அபிவிருத்திச் சுட்டெண்
(3) பௌதிக வாழ்க்கைத்தரச் சுட்டெண்
(4) மனித வறுமைச் சுட்டெண்
(5) துன்புறுதற் சுட்டெண்

7. BRICS 17 ஆவது உச்சி மாநாடு 'அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேண் ஆளுகைக்காகத் தென் பூகோள ஒத்துழைப்பை வலுப்படுத்தல்' என்னும் கருப்பொருளின் கீழ் 2025 யூலையில் நடைபெற்றது. இம்மாநாடு எந்நாட்டில் நடைபெற்றது?
(1) பிறேசில்
(2) ரஷ்யா
(3) இந்தோனேசியா
(4) சவுதி அரேபியா
(5) சீனா

8. கேடு விளைவிக்கும் கல்சியம் காபைட் போன்ற பொருள்கள் உள்ள 640 கொள்கலங்களைக் கொண்ட ஒரு லைபீரியச் சரக்குக் கப்பல் 2025 மே மாதத்தில் இந்தியாவின் கொச்சிக் கரைக்கு அப்பால் கடலில் மூழ்கியது. இக்கப்பலின் பெயர் யாது?
(1) MSC Elsa 3
(2) Mt New Diamond
(3) X - Press Pearl
(4) MSC Tessa
(5) MV Sea Star

9. 2025 செப்ரெம்பர் மாத இறுதியில் இலங்கைச் சனாதிபதி அரசு முறைப் பயணம் செய்த நாட்டின் பெயர் யாது?
(1) சீனா
(2) இந்தியா
(3) ஜேர்மனி
(4) யப்பான்
(5) ஐக்கிய இராச்சியம்

10. Space X என்ற விண்வெளிப் போக்குவரத்துச் சேவைக் கம்பனிக்குரிய உயர்வேகச் செய்மதி இணையச் சேவையாகிய 'Starlink' அண்மையில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. Space X இன் இணைநிறுவனர் யார்?
(1) எலொன் மஸ்க்
(2) நாதன் பென்ஸ்
(3) மெறெடித் ரோல்ஸ்
(4) வு யுன்ஹுவா
(5) ஜோசப் வாங்

● **11, 12** ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு குறித்த பாடசாலையில் கடந்த ஆண்டு நடைபெற்ற க. பொ. த. (உ.த.) பரீட்சைக்கு 200 மாணவர்கள் தோற்றினர். அவர்களில் 35.0% ஆனோர் வர்த்தக மாணவர்களும் 10.0% ஆனோர் கலை மாணவர்களும் ஆவர். பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 80.0% ஆனோர் பல்கலைக்கழக அனுமதிக்காகத் தகைமை பெற்றனர். பல்கலைக்கழக அனுமதிக்காகத் தகைமை பெற்றவர்களில் 30.0% ஆனோர் வர்த்தக மாணவர்களும் 7.5% ஆனோர் கலை மாணவர்களும் ஆவர்.

11. எத்தனை வர்த்தக மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காகத் தகைமை பெற்றுள்ளனர்?
(1) 9 (2) 21 (3) 48 (4) 49 (5) 56

12. பல்கலைக்கழக அனுமதிக்காகத் தகைமை பெற்றுள்ள கலை மாணவர்களின் சதவீதம் யாது?
(1) 48.0% (2) 56.0% (3) 60.0% (4) 64.0% (5) 72.0%

13. ஒரு குறித்த மாநகர சபை 2025 ஆம் ஆண்டிற்கான ஆதனங்களுக்குரிய மதிப்பீட்டு வரியை 12% இனால் அதிகப்படுத்தியது. வரி செலுத்துபவர்கள் ஆண்டிற்கான மொத்த வரியை ஜனவரிக்குள் செலுத்தும்போது அவர்களுக்கு 10% கழிவீடு வழங்கப்படும். ஒரு குறித்த ஆதனத்தின் வரி செலுத்துபவர் ஆதனத்திற்காக 2025 ஜனவரி 16 அன்று ரூ. 12 600 ஐ மதிப்பீட்டு வரியாகச் செலுத்தினார். இந்த ஆதனத்திற்காக 2024 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மதிப்பீட்டு வரி தொடர்பாக அவர் 2025 ஆம் ஆண்டில் செலுத்த வேண்டிய மேலதிக தொகை யாது?
(1) ரூ. 100.00 (2) ரூ. 250.00 (3) ரூ. 650.00 (4) ரூ. 720.00 (5) ரூ. 950.00

14. ஒரு தோடம்பழப் பானத்தில் 50% பழ உள்ளடக்கம் உள்ளது. அப்பானத்தைத் தயாரிப்பதற்குத் தூய தோடம்பழச் சாறு நீருடன் ஐதாக்கப்பட்டது. அப்பானத்தில் உள்ள பழ உள்ளடக்கத்தின் உண்மையான விலை அதன் குறித்த சில்லறை விலையின் $\frac{1}{3}$ ஆகும். பழ உள்ளடக்கம் 60% இனால் அதிகரிக்கப்பட்டால், குறித்த சில்லறை விலை என்ன சதவீதத்தினால் அதிகரிக்கும்?
(1) 10% (2) 15% (3) 20% (4) 25% (5) 30%

[பக். 3 ஐப் பார்க்க

CamScanner

**15.** தந்தை ஒருவர் தனது இறுதி உயிலில் ரூ. 8 மில்லியன் அசையும் சொத்துகளையும் ரூ. 115 மில்லியன் பெறுமானமுள்ள தனது நிலையான சொத்துகளில் 60% ஐயும் தனது ஒரே மகனுக்கும் நிலையான சொத்துகளில் மீதியாகிய 40% ஐத் தனது ஒரே மகளுக்கும் குறித்தொதுக்கினார். அவ்வாறே தாய் தனது உயிலில் ரூ. 7 மில்லியன் பெறுமானமுள்ள தனது அசையும் ஆதனத்தையும் ரூ. 120 மில்லியன் பெறுமானமுள்ள தனது நிலையான சொத்துகளில் 60% ஐயும் தனது மகளுக்கும் நிலையான சொத்துகளின் மீதி 40% ஐத் தனது மகனுக்கும் குறித்தொதுக்குகின்றார். மகனுக்கும் மகளுக்கும் கிடைக்கும் மொத்தச் சொத்துகளின் விகிதம் யாது?

(1) 13:11 (2) 14:13 (3) 1:1 (4) 13:14 (5) 11:13

**16.** ஒரு கடுகதிப் புகையிரதம் P உம் ஒரு மந்த கதிப் புகையிரதம் Q உம் X, Y என்னும் இரு பிரதான புகையிரத நிலையங்களுக்கிடையே இயக்கப்படுகின்றன. ஒரு குறித்த நாளில் மு. ப. 08.00 இற்குப் புகையிரதம் Q அதன் பயணத்தை X இலிருந்து Y இற்கு ஆரம்பித்து $40\ \mathrm{km\,h^{-1}}$ என்னும் ஒரு சீரான கதியில் செல்கின்றது. மு. ப. 08.30 இற்குப் புகையிரதம் P அதன் பயணத்தை X இலிருந்து ஆரம்பித்து $60\ \mathrm{km\,h^{-1}}$ என்னும் ஒரு சீரான கதியில் நிலையம் Y ஐ நோக்கிச் செல்கின்றது. புகையிரதம் P என்ன நேரத்தில் புகையிரதம் Q ஐக் கடந்து செல்லும்?

(1) மு. ப. 08.30 (2) மு. ப. 09.00 (3) மு. ப. 09.30 (4) மு. ப. 10.00 (5) மு. ப. 10.30


**17.** 2025 ஆம் ஆண்டில் ஒரு பாட்டியின் வயது அவருடைய பேர்த்தியின் வயதின் 5 மடங்காகும். அதே ஆண்டில் பாட்டியினதும் தாயினதும் வயதுகளின் விகிதம் 10:6 ஆகும். பேர்த்தி 2011 இல் பிறந்தால், பாட்டி, தாய் ஆகியோர் பிறந்த ஆண்டுகள் முறையே யாவை?

(1) 1950, 1981 (2) 1952, 1982 (3) 1955, 1983 (4) 1956, 1984 (5) 1957, 1985

**18.** ஒரு குறித்த பாடசாலையில் எல்லா மாணவர்களும் குறைந்தபட்சம் ஓர் உள்ளக விளையாட்டிலேனும் அல்லது வெளியக விளையாட்டிலேனும் பங்குபற்றல் வேண்டும். உள்ளக விளையாட்டுகளுக்காகப் பதிவுசெய்யும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை உள்ளக உடற்பயிற்சிக்கூடத்தின் கொள்ளளவாகிய 750 இற்கு மேற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தத்தக்கதாக உள்ளக விளையாட்டுகளுக்கான விருப்பம் உள்ளவர்கள் தொடக்கத்தில் பதிவு செய்யப்படுகின்றனர். ஒரு குறித்த ஆண்டில் உள்ளக விளையாட்டுகளுக்காக முழுக் கொள்ளளவில் மாணவர்கள் பதிவுசெய்து இருந்ததோடு அவர்களில் 20% ஆனோர் வெளியக விளையாட்டுகளுக்காகவும் பதிவுசெய்துள்ளனர். வெளியக விளையாட்டுகளுக்காகப் பதிவுசெய்துள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1300 எனின், பாடசாலையில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(1) 1600 (2) 1700 (3) 1800 (4) 1900 (5) 2000

**19.** ஒரு கட்டடம் வரிப்படத்திற் காட்டப்பட்டுள்ளவாறு வட்டத் தரையுடனும் வட்டக் கூரையுடனும் அமைக்கப்பட்டுள்ளது. அதன் தரையின் பரப்பளவு 154 சதுர மீற்றர் ஆகும். கூரையின் ஆரை தரையின் ஆரையின் 1.5 மடங்கெனின், கூரையின் பரப்பளவு சதுர மீற்றரில் யாது?



(குறிப்பு : ஒரு வட்டத்தின் பரப்பளவு $= \pi r^2$; இங்கு $\pi = \dfrac{22}{7}$ உம் $r$ ஆரையும் ஆகும்.)

(1) 196.5 (2) 217.5 (3) 284.0 (4) 313.0 (5) 346.5

**20.** ஒரு T-20 கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் வெல்வதற்கு ஒரு குழு அவர்களுடைய 20 ஓவர்களில் 190 ஓட்டங்களைப் பெறுதல் வேண்டும். இக்குழு அவர்களுடைய முதல் 15 ஓவர்களில் ஓவருக்கு 8.8 ஓட்டங்கள் என்னும் வீதத்தைப் பேணினால், அவர்கள் எஞ்சியிருக்கும் 5 ஓவர்களில் பேணவேண்டிய குறைந்தபட்ச ஓட்ட வீதம் யாது?

(1) ஓவருக்கு 11.6 (2) ஓவருக்கு 10.2 (3) ஓவருக்கு 9.5
(4) ஓவருக்கு 9.15 (5) ஓவருக்கு 0.7

PAST PAPERS WIKI

**21.** ஒரு தோட்டத்தில் பெருந்தொகையான தென்னைகளுக்கு மேலதிகமாகக் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் பலா மரங்களும் ஈரப்பலா மரங்களும் உள்ளன. 2024 ஆம் ஆண்டில் அந்த ஒவ்வொரு வகை மரத்திலிருந்தும் கிடைத்த வருமானமும் அம்மர வகைக்கான பராமரிப்புச் செலவும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| மரத்தின் வகை | வருமானம் (ஆயிரம் ரூபாயில்) | பராமரிப்புச் செலவு (ஆயிரம் ரூபாயில்) |
|---|---|---|
| தென்னை | 16 250 | 1 250 |
| பலா | 4 875 | 375 |
| ஈரப்பலா | 3 250 | 250 |

பின்வருவனவற்றுள் எது தென்னை : பலா : ஈரப்பலா இலாப விகிதமாகும்?


(1) 12 : 4 : 3 (2) 10 : 5 : 4 (3) 10 : 4 : 3 (4) 10 : 3 : 2 (5) 9 : 2 : 1

[பக். 4 ஐப் பார்க்க



CS CamScanner

● **22** தொடக்கம் **24** வரையுள்ள வினாக்கள் பின்வரும் விவரணத்தை அடிப்படையாகக் கொண்டவை.

இமோஜிப்தின் புராண நாகரிகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பப்பிரஸ் பின்வரும் அட்டவணையில் அடங்கியிருந்தது. அதில் பூச்சியம் தொடக்கம் ஆறு வரையுள்ள எண்கள் (*n*) நிரை 1 இலும் அவற்றின் ஐந்தாம் வலுக்கள் ($5^n$) நிரை 2 இலும் இமோஜிப்திய எண்குறிகளில் எழுதப்பட்டுள்ளன.




**22.** பின்வருவனவற்றில் எது இமோஜிப்தில் 2025 ஆகும்?

(1) 
(2) 
(3) 
(4) 
(5) 

**23.** பின்வரும் எவ்வெண் இமோஜிப்தில்  எழுதப்பட்டுள்ளது?

(1) 36 (2) 45 (3) 54 (4) 78 (5) 81

**24.** இமோஜிப்தில் பெருக்கலுக்கான குறியீடு  எனின், இமோஜிப்தியக் கோவை  இன் பெறுமானம் யாது?

(1) 
(2) 
(3) 
(4) 
(5) 

● **25** தொடக்கம் **27** வரையுள்ள வினாக்கள் பின்வரும் விவரணத்தை அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு வண்டும் ஒரு மயிர்கொட்டியும் பி. ப. 4.00 இற்கு ஓர் இலையை உண்ணத் தொடங்கின. ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் வண்டு முந்திய மணித்தியாலத்தில் உண்ட இலையின் பரப்பளவில் அரைவாசியையும் மயிர்கொட்டி முந்திய மணித்தியாலத்தில் உண்ட இலையின் பரப்பளவில் கால்வாசியையும் உண்டன. அவை ஒவ்வொன்றும் பி. ப. 6.00 தொடக்கம் பி. ப. 7.00 வரைக்கும் கால்வாசிச் சதுரச் சென்றிமீற்றரை உண்டுள்ளன.

**25.** பின்வரும் எது பொய்யானது?

(1) மயிர்கொட்டி பி. ப. 5.00 இற்கும் பி. ப. 6.00 இற்குமிடையே உள்ள ஒரு நேரத்தில் 4.5 $cm^2$ ஐ உண்டு முடித்தது.
(2) பி. ப. 5.00 இற்கும் பி. ப. 6.00 இற்குமிடையே வண்டிலும் பார்க்க மயிர்கொட்டி 0.5 $cm^2$ ஐக் கூடுதலாக உண்டது.
(3) பி. ப. 7.00 இற்கும் பி. ப. 8.00 இற்குமிடையே மயிர்கொட்டி உண்ட அளவின் இருமடங்கான அளவை வண்டு உண்டது.
(4) மயிர்கொட்டி நள்ளிரவு ஆகும்போது 5.5 $cm^2$ ஐ உண்டு முடிக்கவில்லை.
(5) வண்டு பி. ப. 6.00 இற்கும் பி. ப. 7.00 இற்குமிடையே உள்ள ஒரு நேரத்தில் 2 $cm^2$ ஐ உண்டுமுடித்துள்ளது.

**26.** பின்வரும் வாக்கியங்களை நிச்சயமானது (A), மிகவும் நிகழத்தக்கது (B), நிகழத்தக்கது (C), குறைந்த அளவில் நிகழத்தக்கது (D), நிகழமுடியாதது (E) என ஒழுங்குமுறையில் வகைப்படுத்தப்பட்ட விடையைத் தெரிவு செய்க.

- பி. ப. 7.55 தொடக்கம் பி. ப. 8.55 வரைக்கும் மயிர்கொட்டியிலும் பார்க்க வண்டு கூடுதலாக உண்டது.
- அவை அடுத்த நாள் இலையை ஒரே நேரத்தில் உண்டு முடிக்கும்போது வண்டிலும் பார்க்க மயிர்கொட்டி கூடுதலாக உண்டுள்ளது.
- பி. ப. 7.00 தொடக்கம் பி. ப. 7.10 வரைக்கும் மயிர்கொட்டியிலும் பார்க்க வண்டு ஒரு விரைவான வீதத்தில் இலையை உண்டது.
- அவை அடுத்த நாள் நண்பகல் 12 வரைக்கும் 8 $cm^2$ இற்கு மேற்பட்ட இலையை ஒருமிக்க உண்டன.
- மயிர்கொட்டி பி.ப. 5.55 தொடக்கம் பி. ப. 6.55 வரைக்கும் இலையை ஒரு மாறா வீதத்தில் உண்டது.

(1) *A, B, C, D, E* (2) *B, A, C, E, D* (3) *B, C, A, D, E*
(4) *C, A, E, B, D* (5) *C, D, E, A, B*

**27.** வண்டும் மயிர்கொட்டியும் பி. ப. 7.00 வரைக்கும் இலையின் அரைவாசியை ஒருமிக்க உண்டிருந்தால், இலையின் பரப்பளவு சதுரச் சென்றிமீற்றரில் யாது?

(1) 18 (2) 16 (3) 14 (4) 12 (5) 10


[பக். 5 ஐப் பார்க்க

62427



**28.** ஒரு சதுரமுகியின் ஆறு முகங்களில் தனித்தனியாக ஒரு குற்று, இரு குற்றுகள், மூன்று குற்றுகள், நான்கு குற்றுகள், ஐந்து குற்றுகள், ஆறு குற்றுகள் என்றவாறு குற்றுகளை, எவையேனும் இரு எதிர் முகங்கள் மீது உள்ள குற்றுகளின் கூட்டுத்தொகை 7 ஆக இருக்குமாறு, குறிப்பதன் மூலம் ஒரு நியமத் தாயக்கட்டை செய்யப்படுகின்றது.

இப்போது உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு ஏழு நியமத் தாயக்கட்டைகளைக் கொண்ட ஒரு சேர்த்திப் பொருள் பின்வருமாறு செய்யப்படுகின்றதெனக் கொள்வோம்.




- சேர்த்திப் பொருளின் நடுவில் ஒரு தாயக் கட்டை நிலைப்படுத்தப்பட்டுள்ளது.
- அதன் ஒவ்வொரு முகத்திலும் வேறொரு தாயக் கட்டை ஒட்டப்படும்போது, ஒன்றன் மீதொன்று ஒட்டப்படும் இரு முகங்கள் மீதும் உள்ள குற்றுகளின் எண்ணிக்கை சமமாக இருக்குமாறு, ஒட்டப்படுகின்றது.
- இவ்வாறாக, நடுவே நிலைப்படுத்தப்பட்ட தாயக் கட்டையின் ஆறு முகங்களின் மீதும் ஆறு தாயக் கட்டைகள் ஒட்டப்படுகின்றன.

சேர்த்திப் பொருளின் புற முகங்களின் மீது தோற்றும் குற்றுகளின் எண்ணிக்கைகளின் கூட்டுதொகை யாது?

(1) 84 (2) 91 (3) 105 (4) 126 (5) 133

**29.** சம நீளம் உள்ள மூன்று மெல்லிய தள ஆடிகள் ஒரு சமபக்க முக்கோணியை ஆக்குமாறு நிலைப்படுத்தப்பட்டுள்ளன.


உருவில் காட்டப்பட்டுள்ளவாறு முக்கோணியின் மையத்தில் ஒரு சிறிய ஒளிர் பொருள் வைக்கப்படும்போது, ஒளியின் தெறிப்பின் மூலம் எத்தனை விம்பங்கள் உண்டாக்கப்படும்?



(1) 3 (2) 6 (3) 9 (4) 12 (5) 15

- **30** தொடக்கம் **32** வரையுள்ள வினாக்கள் பின்வரும் விவரணத்தை அடிப்படையாகக் கொண்டவை.

பொறியை இயக்குபவர் ஒருவர் ஒரே வகை உடுப்பை அரை நாளுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்குத் தைப்பதன் மூலம் அதில் திறன்களைப் பெறுகின்றார். அவர் மேற்சட்டைகளை (அல்லது காற்சட்டைகளை) மாத்திரம் தயாரித்தால், அவர் தினமும் தயாரிக்கும் மேற்சட்டைகளின் (அத்துடன் காற்சட்டைகளின்) எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதைக் கீழே தரப்பட்டுள்ள வரைபு எடுத்துக் காட்டுகின்றது. பொறியை இயக்குபவர் வழக்கமாக ஒரே வீதத்தில் தைக்கும் அதே வேளை வழங்கப்படவேண்டிய ஒரு வகை உடுப்பின் எல்லா அலகுகளும் செய்து முடிக்கப்பட்டிருந்தாலும் அரைநாள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் எஞ்சியிருந்தாலும் அவர் ஒரு நாளில் வேறு வகை உருப்படிகளைத் தைக்கத் தொடங்கமாட்டார்.




**30.** 300 மேற்சட்டைகள் மாத்திரம் என்னும் வழங்கல் கட்டளையைப் (order) பூர்த்திசெய்வதற்கு அவருக்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?

(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5

**31.** அவர் 80 மேற்சட்டைகளுக்கும் 140 காற்சட்டைகளுக்குமான வழங்கற் கட்டளையை எத்தனை நாட்களில் திறமையாகப் பூர்த்திசெய்யலாம்?

(1) 3 (2) 4 (3) 5 (4) 6 (5) 7

**32.** பிழையான கூற்றைத் தெரிந்தெடுக்க.

(1) ஒரு வகை உடுப்பைத் தைக்கும் வீதம் ஒரு புதிய வகை தொடக்கப்படும் வரைக்கும் மாறமாட்டாது.
(2) மேற்சட்டைகளுக்கும் காற்சட்டைகளுக்குமான ஒரு வழங்கற் கட்டளை கிடைக்கும்போது அது முடிவடையும் திகதி முதலாவதாகத் தைப்பதற்கு எடுக்கும் வகைக்கேற்ப மாறமாட்டாது.
(3) முதல் இரு நாட்களில் மேற்சட்டைகளைத் தைக்கும் வீதம் மாறும் அளவு காற்சட்டைகளைத் தைக்கும் வீதம் மாறும் அளவிலும் கூடியது.
(4) மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து தைத்தால் மாத்திரம் காற்சட்டைகளின் அதே சராசரி வீதத்தில் மேற்சட்டைகள் தைக்கப்படும்.
(5) மேற்சட்டைகளைத் தைப்பதற்குக் காற்சட்டைகளைத் தைப்பதிலும் பார்க்கக் கூடுதலான ஆற்றல் தேவைப்படும்.

PAST PAPERS WIKI

[பக். 6 ஐப் பார்க்க

CS CamScanner

● **33** தொடக்கம் **37** வரையுள்ள வினாக்கள் பின்வரும் விவரணத்தை அடிப்படையாகக் கொண்டவை.

ஐரீன், யொசிபீன், ரோசலின், அஞ்சிலின், கதரின் என்ற ஐந்து நண்பிகள் வானில் பறக்கும் இரு பட்டங்களைப் பார்த்துக் கொண்டு அவற்றின் உயரங்கள் பற்றிப் பின்வருமாறு விமர்சித்தனர்.

ஐரீன் : பார்! சிவப்பு நிறப் பட்டம் 200 அடிக்கு மேலே இருத்தல் வேண்டும்; ஆனால் நீல நிறப் பட்டம் 100 அடியைக்கூட அடையவில்லை.

யொசிபீன் : முடியாது! என்னால் நீலநிறப் பட்டத்தைத் தெளிவாகப் பார்க்க முடியவில்லை; ஆனால் சிவப்பு நிறப் பட்டம் 100 அடிக்குக் கீழே உள்ளது.

ரோசலின் : நான் இங்கேயிருந்து நீல நிறப் பட்டத்தைப் பார்க்கிறேன். அது 100 அடிக்கு மேலே, ஆனால் 200 அடிக்குக் கீழே உள்ளது என்பதையிட்டுச் சந்தேகமில்லை.

அஞ்சிலின் : உங்களால் சிவப்பு நிறப் பட்டத்தைப் பார்க்க முடியவில்லையா? அது 100 அடிக்கு மேலே உள்ளது.

கதரின் : உண்மையில் அஞ்சிலின், அது 200 அடிக்கு மேலே, நீல நிறப் பட்டம் அதிலும் கீழே, ஆனால் 100 அடிக்கு மேலே உள்ளது.

**33.** மேற்குறித்த கலந்துரையாடலில் உண்மை பேசுபவர்களின் உயர்ந்தபட்சச் சாத்தியமான எண்ணிக்கை யாது?
(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5

**34.** கலந்துரையாடலில் பட்டங்களின் (அடியிலான) பின்வரும் உயரங்களில் எது உண்மை பேசுபவர்களுக்கு இடமளிப்பதாகவில்லை?
(1) சிவப்பு - 100, நீலம் - 120
(2) சிவப்பு - 90, நீலம் - 200
(3) சிவப்பு - 120, நீலம் - 90
(4) சிவப்பு - 100, நீலம் - 220
(5) சிவப்பு - 90, நீலம் - 220

**35.** கலந்துரையாடலில் இருவர் மாத்திரம் உண்மையைப் பேசினால், அவர்கள் இருவரும் யாராக இருப்பார்கள்?
(1) ஐரீனும் கதரினும்
(2) யொசிபீனும் ரோசலினும்
(3) கதரினும் ரோசலினும்
(4) கதரினும் யொசிபீனும்
(5) ஐரீனும் யொசிபீனும்

**36.** நீல நிறப் பட்டம் தற்போது இருக்கும் உயர மட்டத்திலிருந்து மட்டுமட்டாக ஒரு அடி கீழே இருப்பின், உண்மை பேசும் இருவர் பொய்யர்களாக மாறுவர். நீல நிறப் பட்டத்தின் தற்போதைய உயரம் யாது?
(1) 201 அடி (2) 200 அடி (3) 150 அடி (4) 101 அடி (5) 100 அடி

**37.** எவரும் உண்மை பேசாமலும் இரு பட்டங்களும் ஒரே உயரத்திலும் இருப்பின், அவற்றின் உயரம் யாது?
(1) 250 அடி
(2) 200 அடி
(3) 120 அடி
(4) 100 அடி
(5) தீர்மானிப்பதற்குத் தரவு போதியதன்று

● **38** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு கலவன் பாடசாலையின் தரம் 11 இல் முதலாம் மொழி, சமயம், ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம், வரலாறு என்னும் பாடங்களில் உயர்ந்த புள்ளிகளைப் பெற்றவர்கள் $P, Q, R, S, T, U$ ஆவதோடு பாடங்களின் தரப்பட்ட ஒழுங்குமுறையில் இல்லை.

பின்வரும் தகவல்களைக் கருதுக.

- $P$ உம் வரலாற்றில் அதிக புள்ளிகளைப் பெற்றவரும் ஆண் பிள்ளைகளாவர்.
- $Q$ உம் விஞ்ஞானத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றவரும் பெண் பிள்ளைகளாவர்.
- முதலாம் மொழியிலும் கணிதத்திலும் அதிக புள்ளிகளைப் பெற்றவர்கள் ஆண் பிள்ளைகளாவர்.
- சமயத்திலும் ஆங்கில மொழியிலும் அதிக புள்ளிகளைப் பெற்றவர்கள் பெண் பிள்ளைகளாவர்.
- $R$ ஓர் ஆண் பிள்ளை, ஆனால் முதலாம் மொழியிலோ, கணிதத்திலோ அதிக புள்ளிகளைப் பெற்றவர் இல்லை.
- $S$ ஒரு பெண் பிள்ளை, ஆனால் சமயத்திலோ, ஆங்கில மொழியிலோ அதிக புள்ளிகளைப் பெற்றவர் இல்லை.
- $P$ முதலாம் மொழியில் அதிக புள்ளிகளைப் பெற்றவர் இல்லை.
- $Q$ சமயத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றவர் இல்லை.

[பக். 7 ஐப் பார்க்க

CamScanner

38. *P, Q, R, S* ஆகியோர் முறையே என்ன பாடங்களில் அதிக புள்ளிகளைப் பெற்றவர்கள்?
(1) முதலாம் மொழி, ஆங்கில மொழி, வரலாறு, விஞ்ஞானம்
(2) கணிதம், ஆங்கில மொழி, வரலாறு, விஞ்ஞானம்
(3) வரலாறு, ஆங்கில மொழி, கணிதம், விஞ்ஞானம்
(4) கணிதம், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கில மொழி
(5) வரலாறு, விஞ்ஞானம், கணிதம், ஆங்கில மொழி

39. *T* ஓர் ஆண் பிள்ளையெனின், அவன் எப்பாடத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றான்?
(1) முதலாம் மொழி (2) சமயம் (3) கணிதம்
(4) ஆங்கில மொழி (5) வரலாறு

40. *T* ஒரு பெண் பிள்ளையெனின், சமயத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றவர் யார்?
(1) *Q* (2) *R* (3) *S* (4) *T* (5) *U*

● 41, 42 ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.
கீழே தரப்பட்ட அட்டவணையில் பொது மருத்துவத் தொழிலிற் பயன்படுத்தப்படும் ஆறு பொது மருந்துகள் பற்றிய சில தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| மருந்து | பயன்பாடு | பக்க விளைவுகள் | எதிர்க்காட்டுகைகள் |
|---|---|---|---|
| 1. பரசிற்றமொல் | காய்ச்சல், தலைவலி | ஈரற் சேதம், வயிற்றுப் புண் | ஈரலழற்சி, அதிபரவுணர்ச்சி |
| 2. மெபனமிக் அமிலம் | மூட்டழற்சி, வயிற்றுநோ | இரைப்பையழற்சி (Gastritis), வயிற்றுப் புண் | வயிற்றுப் புண், சிறுநீரகம் செயலிழத்தல் |
| 3. ஐபியூபுரோபென் | காய்ச்சல், அழற்சி(Inflammation) | குமட்டல், வாந்தியெடுத்தல் | அதிபரவுணர்ச்சி |
| 4. பன்ரொபிரசோல் | வாந்தியெடுத்தல், வயிற்றுப் புண் | உடல் வீக்கம் | 10 வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்கு அதிபரவுணர்ச்சி |
| 5. டொம்பெரிடொன் | குமட்டல், வாந்தியெடுத்தல் | உலர் வாய் | ஒவ்வாமை, அதிபரவுணர்ச்சி |
| 6. அன்ரிஹிஸ்ரமீன் | அரிப்பு (நமைச்சல்), பூச்சிக் கடி | உலர் வாய் | கருப்பத்தின்போது அதிபரவுணர்ச்சி |

41. மேற்குறித்த மருந்துகளில் அதிபரவுணர்ச்சியினாற் பீடிக்கப்பட்டுள்ள ஒரு நோயாளிக்குப் பரிந்துரைக்கப்படத்தக்க ஒரு மருந்து மாத்திரம் உள்ளது. இம்மருந்தின் பக்க விளைவுகள் யாவை?
(1) ஈரற் சேதமும் உடல் வீக்கமும்
(2) இரைப்பையழற்சியும் வயிற்றுப் புண்ணும்
(3) குமட்டலும் வாந்தியெடுத்தலும்
(4) உடல் வீக்கமும் உலர் வாயும்
(5) வாந்தியெடுத்தலும் உலர் வாயும்

42. காய்ச்சலினாலும் அழற்சியினாலும் பீடிக்கப்பட்டுள்ள ஒரு நோயாளிக்குப் பரிந்துரைக்கப்படுவதற்கு உகந்த இரு மருந்துகள்
(1) பரசிற்றமொலும் மெபனமிக் அமிலமும் ஆகும்.
(2) ஐபியூபுரோபெனும் டொம்பெரிடொனும் ஆகும்.
(3) பன்ரொபிரசோலும் அன்ரிஹிஸ்ரமீனும் ஆகும்.
(4) பரசிற்றமொலும் பன்ரொபிரசோலும் ஆகும்.
(5) மெபனமிக் அமிலமும் அன்ரிஹிஸ்ரமீனும் ஆகும்.

[பக். 8 ஐப் பார்க்க

CamScanner

- **43, 44** ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு க. பொ. த. (சா. த.) பரீட்சை நிலையத்தில் சமயம் என்னும் பிரதான பாடத்தின் கீழ் வரும் பௌத்த சமயம், சைவநெறி, கத்தோலிக்க திருமுறை, கிறிஸ்தவம், இஸ்லாம் என்னும் ஐந்து பாடங்களுக்குத் தனித்தனியாகத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை பற்றிய புள்ளிவிவரத் தகவல்கள் பின்வரும் அட்டவணையில் உள்ளன. தோற்றிய பரீட்சார்த்திகளின் மொத்த எண்ணிக்கை 160 ஆகும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மேற்குறித்த ஐந்து பாடங்களில் ஒன்றிற்கு மாத்திரம் தோற்றியுள்ளனர்.

| பாடம் / மொழி மூலம் | பௌத்த சமயம் | சைவநெறி | கத்தோலிக்க திருமறை | கிறிஸ்தவம் | இஸ்லாம் |
|---|---|---|---|---|---|
| சிங்களம் | 90 | 00 | 04 | 01 | ... |
| தமிழ் | 00 | 15 | 00 | 03 | 10 |
| ஆங்கிலம் | 10 | 05 | 06 | 06 | 05 |

**43.** இப்பரீட்சை நிலையத்தில் இஸ்லாம் பாடத்திற்கு எத்தனை பரீட்சார்த்திகள் தோற்றினர்?
(1) 05 (2) 10 (3) 15 (4) 20 (5) 25

**44.** இப்பரீட்சை நிலையத்தில் எத்தனை பரீட்சார்த்திகள் சிங்கள மொழி மூலத்தில் தோற்றினர்?
(1) 95 (2) 100 (3) 105 (4) 110 (5) 115

**45.** இவ்வினாவில் 1 இனாலும் 7 இனாலும் குறிப்பிடப்படும் இரு வாக்கியங்களுக்கிடையே உள்ள $A, B, C, D, E$ ஆகிய வாக்கியங்கள் சரியான வரிசையில் இருப்பதில்லை. அந்த ஏழு வாக்கியங்களும் ஒரு தருக்கத் தொடரியில் அமைவதற்கு அவற்றின் பொருத்தமான ஒழுங்கமைப்பைத் தெரிந்தெடுக்க.

1 – இலங்கையில் விபத்துகள், துப்பாக்கிச் சூடுகள், வாள் வெட்டுகள், போதைப் பொருள்கள், நோய்கள், தற்கொலைகள் போன்றவற்றின் விளைவாக அகால மரணங்கள் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. ஆண்டுதோறும் வீதி விபத்துகள் காரணமாக ஏற்படும் மரணங்கள் அதிகரித்து வருகின்றன.

*A* – வாகனச் சாரதிகளின் தவறுகளில் சாரதிகளின் தூக்கம், சாரதிகளின் குடிபோதை, சாரதிகளின் மிகையான வேகம் ஆகியன முக்கியமானவையாகும்.

*B* – துப்பாக்கிச் சூட்டு மரணங்கள் தொடர்பாகப் பலர் கைதுசெய்யப்பட்டும் பல குற்றவாளிகள் கைதுசெய்யப்பட்டும் இருந்தபோதிலும், வீதி விபத்து மரணங்கள் போன்று துப்பாக்கிச் சூட்டு மரணங்களும் இவ்வாண்டில் குறைந்துள்ளதாகத் தெரியவில்லை.

*C* – இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களின்போது பதிவுசெய்யப்பெற்ற 1274 வீதி விபத்துகளின் விளைவாக 1351 மரணங்கள் ஏற்பட்டுள்ளனவெனப் புள்ளிவிவரங்களிலிருந்து அறியத்தக்கதாக உள்ளது. முந்தைய ஆண்டின் முதல் ஆறு மாதங்களின்போது நிகழ்ந்த வீதி விபத்துகளின் எண்ணிக்கை 1166 உம் மரணங்களின் எண்ணிக்கை 1222 உம் ஆகும்.

*D* – வீதி விபத்துகள் முக்கியமாக சாரதிகளின் தவறுகள், வீதியில் அலைந்து திரியும் (கட்டாக்காலி) விலங்குகள், பொதுவாக மலைநாட்டில் உள்ள மோசமான, வழுக்கலான வீதிகள் ஆகியவற்றின் விளைவாக ஏற்படுகின்றன.

*E* – சாரதிகளின் தவறுகள் தவிர, பொலீஸ் நடந்துகொள்ளும் விதத்திற்கெதிராகக் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்படுகின்றபோதிலும், போக்குவரத்துப் பொலிசார் கவனித்துக் கொள்ள வேண்டிய ஏனைய விடயங்களும் உள்ளன.

7 – மேற்குறித்த விடயங்கள் தவிர, போதைப்பொருள் பயன்பாடு காரணமாகவும் திகிலடையச் செய்யும் ஆபத்து உள்ளது. இந்த ஆபத்தைப் புரிந்து கொண்டுள்ள அரசாங்கம் உடனடியாக 04 புனர்வாழ்வு நிலையங்களில் ஆரம்பித்து ஒவ்வொரு மாகாணத்திற்கும் குறைந்தபட்சம் ஒரு புனர்வாழ்வு நிலையமாகப் பல புனர்வாழ்வு நிலையங்களை அமைப்பதற்கு உத்தேசித்துள்ளது.

(1) $C, D, A, E, B$ (2) $C, D, B, A, E$ (3) $C, E, D, A, B$ (4) $D, A, E, B, C$ (5) $D, A, E, C, B$

PAST PAPERS WIKI

[பக். 9 ஐப் பார்க்க

CamScanner

46. பின்வரும் $A, B, C, D, E$ என்னும் ஐந்து பிரிவுகள் ஒவ்வொன்றிலும் மூன்று கூற்றுகள் உள்ளன. இப்பிரிவுகளில் எது ஓர் அர்த்தமுள்ள தொடரியாக மீளவொழுங்குபடுத்தப்படத்தக்க மூன்று கூற்றுகளைக் கொண்டுள்ளது?

*A* (a) வெப்பமான பகல் வேளையில் தேனீக்கள் தேன்கூட்டில் வேலை செய்கின்றன.
(b) தேனீக்கள் அதிகாலையில் தேனைச் சேகரிக்கத் தொடங்குகின்றன.
(c) பூக்கும் மரங்கள் ஏராளமாகவுள்ள இடங்களில் பொதுவாகத் தேன்கூடுகள் காணப்படும்.

*B* (a) நாய்களும் பூனைகளும் வீட்டு விலங்குகளாகும்.
(b) கால்நடைகளும் வெள்ளாடுகளும் கிராமங்களில் உள்ள வீடுகளில் சிறிய அளவில் வளர்க்கப்படுகின்றன.
(c) கால்நடைகளும் வெள்ளாடுகளும் பண்ணைகளில் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன.

*C* (a) வித்துகள், நாற்றுகள், தண்டுகள், வேர் வெட்டுத்துண்டுகள் ஆகியன பொதுவாக நடுகைப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன.
(b) தேவையான வேளையில் உகந்த வீதத்தில் வளமாக்கிகளையும் ஏனைய விவசாய இரசாயனப் பொருள்களையும் பிரயோகித்தல் ஓர் அத்தியாவசியப் படிமுறையாகும்.
(c) விளைச்சலை அறுவடை செய்தலும் அறுவடைக்குப் பிந்திய சரியான களஞ்சியப்படுத்தலும் விவசாயத்தில் அத்தியாவசியச் செயன்முறைகளாகும்.

*D* (a) சீவிய பனையின் பாளையிலிருந்து கசிந்தொழுகும் புதிய நொதிக்காத சாறு பதநீர் (கருப்பநீர்) எனப்படும்.
(b) பனங்கட்டி பழுப்புச் சீனியாகவும் வெள்ளைச் சீனியாகவும் பதனிடப்படலாம்.
(c) பதநீர் (கருப்பநீர்) வெப்பமாக்கப்படும்போது பாணி எனப்படும் தடித்த திரவமாகி, மேலும் வெப்பமாக்கப்படும்போது பனங்கட்டி எனப்படும் திண்மமாக மாறுகின்றது.


*E* (a) சிலிக்கா எனப்படும் தூய வெண் மணல் இலங்கையின் வட கிழக்குக் கடற்கரைப் பிரதேசத்தில் இயற்கையாகக் கிடைக்கின்றது.
(b) வெண் மணல் கட்டுமானத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.
(c) வெண் மணல் உற்பத்தித் தொழிலுக்குரிய ஒரு மூலப்பொருளாகும்.

(1) *A* (2) *B* (3) *C* (4) *D* (5) *E*


47. பின்வரும் படங்களினால் விவரிக்கப்படும் நிகழ்வுகளைக் கருதுக.



*A*


*B*


*C*


*D*


*E*


*F*

பின்வரும் பட ஒழுங்கமைப்புகளில் எது நிகழ்வுகளின் சரியான தொடரியைத் தருகின்றது?

(1) *C, A, E, B, D, F* (2) *C, E, A, B, D, F* (3) *C, E, A, F, B, D*
(4) *C, E, D, B, A, F* (5) *E, C, A, B, F, D*

[பக். 10 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න
Past Papers Wiki
CamScanner

● **48** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் பின்வரும் கலந்துரையாடலை அடிப்படையாகக் கொண்டவை.

தாயும் அவருடைய இரு மகள்மாரும் அம்மம்மாவைப் பார்ப்பதற்காக வைத்தியசாலை வாட்டிற்குச் சென்றனர். அவர்கள் அதே வாட்டில் அடுத்த படுக்கையில் சிகிச்சை பெறும் ஷீலா அன்ரியைச் சந்தித்தனர். அவர்கள் வாட்டில் உள்ளபோது ஷீலாவைப் பார்க்க வந்திருந்த பெண்மணியாகிய கருணாவையும் சந்தித்தனர். இரு பேரப் பிள்ளைகள், தாய், கருணா ஆகிய அவர்கள் அனைவரும் கருணாவின் வாகனத்தில் வீட்டிற்குத் திரும்பி வந்தனர். அவர்களுக்கிடையே நடைபெற்ற கலந்துரையாடல்கள் கீழே *A* தொடக்கம் *K* வரைக்கும் சரியான ஒழுங்குமுறையிலன்றித் தரப்பட்டுள்ளன.

*A* : ஆம்! அடுத்த 06 ஆம் இலக்கப் படுக்கையில் எமது நண்பி ஷீலாவும் சிகிச்சை பெறுவதையிட்டு ஆச்சரியப்படுகிறேன். அவரைப் பார்க்க வந்த எமது நண்பி கருணாவையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன். இப்போது நேரம் பி. ப. 6 மணி ஆகின்றது. நாம் வாட்டிலிருந்து வெளியேற வேண்டும்.

*B* : அம்மா, இன்று பின்னேரம் எமக்கு ரியூஷன் வகுப்பு இல்லை. எமது அம்மம்மாவைப் பார்ப்பதற்கு எம்மை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் செல்லுங்கள்.

*C* : ஓட்டோ ராக்சி வந்துவிட்டது. நாங்கள் போவோம். போய்வருகிறோம். அம்மப்பா.

*D* : அங்கு 07 ஆம் இலக்கப் படுக்கை உள்ளது. அம்மம்மா எம்மைப் பார்த்துக் காத்திருக்கிறார்.

*E* : ஆம், அம்மம்மா உங்கள் அனைவரையும் பார்த்துச் சந்தோஷப்படுவார்.

*F* : தயதுசெய்து வாட் 03, பெண் பிரிவு எங்கே உள்ளதெனப் பாருங்கள்.

*G* : கருணா அன்ரி உங்கள் அழைப்புக்காக மிக்க நன்றி. கருணா அன்ரி உங்கள் பிள்ளைகளையும் ஏன் கூட்டிவரவில்லை?

*H* : நீங்கள் எல்லோரும் என்னுடன் சேர்ந்து எனது காரில் போகலாம்.

*I* : ஆம்! ஒரு நல்ல பொழுதுபோக்கு. அது எமது உடனலத்திற்கும் படிப்புக்கும் நல்லது.

*J* : அது செலவுமிக்கது.

*K* : எனக்கு மூன்று பையன்கள் உள்ளனர். அவர்கள் அப்பாவுடன் நீந்தச் சென்றுள்ளனர்.

**48.** பின்வரும் எந்தச் சேர்மானத்தில் தாய்க்கும் பிள்ளைகளுக்குமிடையே நடைபெற்ற கலந்துரையாடல்களின் சில அம்சங்கள் சரியாக ஒழுங்கமைந்துள்ளன?

(1) *B, C, F, D, E* (2) *B, E, C, F, D* (3) *C, F, D, B, E*
(4) *C, F, D, E, B* (5) *D, F, E, C, B*

**49.** பின்வரும் எந்தச் சேர்மானத்தில் கருணாவுக்கும் பிள்ளைகளுக்குமிடையே உள்ள கலந்துரையாடலின் சில அம்சங்கள் சரியாக ஒழுங்கமைந்துள்ளன?

(1) *H, G, I, K, J* (2) *H, G, J, K, I* (3) *H, G, K, J, I*
(4) *I, J, K, G, H* (5) *K, G, H, I, J*

**50.** பின்வரும் எது முழுக் கலந்துரையாடலினதும் தருக்கத் தொடரியாகும்?

(1) *B, C, F, D, E, A, K, G, H, I, J*
(2) *B, E, C, F, D, A, H, G, K, J, I*
(3) *C, F, D, B, E, A, H, G, J, K, I*
(4) *C, F, D, E, B, A, H, G, J, K, I*
(5) *D, F, E, C, B, A, I, J, K, G, H*

* * *

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library

CamScanner